IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 107/2018

Deposition of Witness : DW 1

Name : மோகன் (வயது – 52)

Father's Name /W/o : த/பெ வெள்ளைகண்ணு

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : பழைய ஓச்சலம்

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 05.11.2025.

## குறுக்கு விசாரணை

1. என் மீது யார் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் விநாயகம் தாக்கல் செய்துள்ளார். என் மீது வாதி எதற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் என் சொத்தை அனுபவித்து இருந்தார் கேட்கும் போது என் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் வாதி அவருடைய சொத்து என்று கோரி வழகசு பரிகாரம் கோரியுள்ளார்.

2. எனக்கு எழுத படிக்க தெரியுா என்றால் தெரியும் எத்தனையாவது வரை படித்துள்ளேன் என்றால் 10 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு ஆங்கிலம் தெரியுமா என்றால் கொஞ்சம் தெரியும். என் பதிலுரை தமிழில் தயார் செய்யப்பட்டுள்ளதா அல்லது ஆங்கிலத்தில் தயார் செய்யப்பட்டுள்ளதா என்றால் தெரியவில்லை. நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் விசைத்தறி. நான் செய்யும் விசைத்தறி தொழில் செய்வதற்கு அங்கீகாரம் உள்ளதா என்றால் குடிசைத் தொழில் என்பதால் அங்கீகாரம் தேவையில்லை.

3. விசைத்தறி தொழில் செய்வதற்கு தனியாக மின் இணைப்பு பெற்றுள்ளேனா என்றால் பெற்றுள்ளேன். என் வீட்டில் மின் இணைப்பு இரண்டு உள்ளதா என்றால் இல்லை ஒன்று தான் உள்ளது. விசைத்தறி தொழிலுக்கு மின் இணைப்பு வீட்டுக்கும் பயன்படுத்துகிறேனா என்றால் இல்லை வீட்டிற்கு மட்டும்தான் பயன்படுத்துகிறன். விசைத்தறி ஒரு நாளில் எத்தனை மணி நேரம் ஓடும என்றால் காலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை ஓடும்.

4. விசைத்தறியின் சத்தம் பக்கத்து வீட்டுகாரர்களுக்கு இடையூறாக உள்ளது என்று என் மீது காவல் நிலலையத்தில் யாரேனும் புகார் அளித்துள்ளாரா என்றால் இல்லை. விசைத்தறி எத்தனை உள்ளது என்றால் 3 உள்ளது. மேற்படி 3 விசைத்தறிகளும் காலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை ஓடுமா என்றால் ஆம். விசைத்தறி மூலம் என்னென்ன துணிகளை தயார் செய்கிறேன் என்றால் நண்டுமார்க் லுங்கிகள். நண்டுமார்க் லுங்கிகள் தலைமையகம் எங்கு உள்ளது என்றால் நெமிலியில் உள்ளது.

5. நான் உற்பத்தி செய்த துணிகளை எப்போது தலைமையகத்திற்கு எடுத்து செல்வேன் என்றால் வாரத்திற்கு ஒருமுறை எடுத்து செல்வேன். மின் இல்லாத சமயத்தில் 2 வாரம் ஆகும். உற்பத்தி செய்யும் துணிகளின் கணக்குகளை பராமரிக்கிறேன் என்றால் பராமரிக்கிறேன். விசைத்தறி வாங்க எந்த இடத்தில் லோன் வாங்கினேன் என்றால் நாகவேடு SBI வங்கியில் வாங்கினேன். நான் மட்டும் வாங்கினேனா அல்லது என் அண்ணனும் சேர்ந்து வாங்கினோமா என்றால் நான் மட்டும தான் வாங்கினேன். மேற்படி கடன் வாங்குவதற்கு என்ன பத்திரம் அடமானம் வைத்தேன் என்றால் வீட்டுமனை பத்திரம்.

6. வீட்டுமனை கூட்டாக தான் உள்ளதா என்றால் ஆம். மேற்படி வீட்டுமனை கூட்டாக உள்ளது என்றால் நான் மட்டும் தனிப்பட்ட முறையில் எப்படி அடமானம் வைக்க முடியும் என்றால் 3 பேரும் கூட்டாக தான் அடமானம் வைத்தோம். முதலில் நான் மட்டும் தான் அடமானம் வைப்பேன்

என்று தற்போது கூட்டாக வைத்தோம் என்று முரணாக பதில் அளித்தேன் என்றால் 3 பேரும் சேர்த்து அடமானம் வைத்தோம்.

7. 3 பேரும் சேர்ந்து தான் அடமானம் வைத்து கடன் வாங்கியுள்ளோம் என்றாலும் அதனால் தான் விசைத்தறி 3 உள்ளது என்றால் தனிப்பட்ட முறையில் தான் கொடுத்தார்கள். மொத்த கடன் தொகை எவ்வளவு என்றால் 2.50 லட்சம். மேற்படி தொகையில் எவ்வளவு தள்ளுபடி ஆனது என்றால் 68,000 தள்ளுபடி ஆனது. மேற்படி கடன் மாத தவணைக்கு வாங்கினேனா என்றால் சரிதான். எந்த வருடத்தில் நான் கடன் வாங்கினேன் என்றால் 2014 இருக்கும். 2014 இல் நான் விசைத்தறி வாங்கினேன்.

8. கடன் வாங்கி தற்போது வரை எத்தனை ஆண்டுகள் இருக்கும் என்றால் 11 வருடம். என் பிரமாண வாக்குமூலத்தில் கடன் தொகை முடிக்காமல் வைத்துள்ளேன் என்று கூறியுள்ளேன் என்றால் வழக்கு தாக்கல் செய்யும் வரை நான் முடிக்காமல் தான் இருந்தேன். என் பிரமாண வாக்குமூலத்தில் 18.06.2015 தேதியில் தான் SBI வங்கியில் கடன் வாங்கியதாக தெரிவித்துள்ளேன் என்றால் 2014 இல் கடனுக்கு விண்ணப்பித்தேன் 2015 ஆம் ஆண்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

9. கடனுக்கு விண்ணப்பித்த நாள் மற்றும் மாதம் என்னவென்றால் ஞாபகமில்லை. கடன் தொகை மொத்தமும் செலுத்திவிட்டேனா என்றால் செலுத்திவிட்டேன். வங்கி கடன் செலுத்தப்படாமல் நிலுவையில் உள்ளது என்று என் பிரமாண வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளேன் என்றாலும் தற்போது செலுத்திவிட்டேன் என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் நான் கடன் தொகையை செலுத்திவிட்டேன்.

10. வாதி என் இடத்தில் எந்த திசையில் இடையூறு செய்கிறார் என்றால் என் மனையின் கிழக்கு பக்கம் இடையூறு செய்கிறார். நான் என் அண்ணன் மற்றும் வாதி 10.11.1997 தேதியில் சொத்தை வாங்கினோம் என்று பிரமாண பத்திரத்தில் தெரிவித்துள்ளேன் என்றால் வாதிக்கும் எனக்கும் சம்பந்தமில்லை. பின்பு எதற்காக வாதியுடன் சேர்ந்து தான் வாங்கினோம் என்று பிரமாண

பத்திரத்தில் தெரிவித்துள்ளேன் என்றால் இல்லை. நான் மற்றும் அண்ணன் மட்டும் தான் வாங்கினோம்.

11. 10.11.1997 தேதியில் வாங்கிய சொத்தின் மொத்த விஸ்தீரணம் என்னவென்றால் 4360 சதுர அடி. நான் வாங்கி சொத்தின் சர்வே எண் என்னவென்றால் 126 ஆகும். நான் வாங்கிய சொத்தின் ஆவணத்தில் சதுர அடியில் உள்ளதா அல்லது செண்ட் கணக்கில் உள்ளதா என்றால் இரண்டும் குறிப்பிட்டுள்ளது. மேற்படி நிலத்தை நான் யாரிடமிருந்த வாங்கினேன் என்றால் லட்சுமியம்மாளிடமிருந்து வாங்கினோம்.

12. நான் வாங்கிய சொத்தில் நான் மட்டும் தான் உள்ளேனா அல்லது என் அண்ணன்களும் உள்ளார்களா என்றால் நான் மட்டும் தான் உள்ளேன். மேற்படி எந்த பகுதியில் வீடு கட்ட சொன்னார்கள் என்றால் கிழக்கு பக்கம் கட்ட சொன்னார்கள். என் அண்ணன்கள் எங்கே இருக்கிறார்கள் என்றால் சேட்டு மற்றும் மோகன் இருவரும் ஏரிக்கரையில் வசிக்கிறார்கள். 10 செண்ட் வாங்கிய சொத்தில் சமமான பாகம் என்றால் எனக்கு எவ்வளவு ஒதுக்கப்பட்டது 3 இல் 1 பாகம் ஒதுக்கப்பட்டது.

13. 3 இல் 1 பாகம் என்றால் 3 1/4 செண்ட் வரும் என்றால் சரிதான். மேற்படி 3 1/4 செண்ட் நிலத்தில் தான் வீடு கட்டியுள்ளேன் என்றால் சரிதான். மேறபடி வீட்டின் வாசப்படி எந்த பக்கம் நோக்கி உள்ளது என்றால் வடக்கு பக்கம் உள்ளது. என் வீட்டின் விஸ்தீரணம் என்னவென்றால் கிழக்கு மேற்கு 20 அடி வடக்கு தெற்கு 22 அடி ஆகும். நான் வீடு எப்போது கட்டினேன் என்றால் 2015–16 இல் கட்டினேன். அன்று முதல் இன்று வரை நான் தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான்.

14. என் அண்ணன் மற்றும் ஏரிக்கரையில் வசித்து வருகிறோம் என்று சாட்சியம் அளித்து விட்டு தற்போது என் சொத்தில் வசித்து வருகிறேன் என்று சாட்சி அளிக்கிறேன் என்றால் ஏரிக்கரையில் சமைப்போம் என் வீட்டில் தூங்க செல்வோம். ஏரிக்கரையில் ஒரு வீடு மட்டும் வாதி வீட்டின் பக்கத்தில் ஒரு வீடு உள்ளதா என்றால் உள்ளது. வாதி என் நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்ததாக

பிரமாண பத்திரத்தில் தெரிவித்துள்ளேன் என்றாலும் எந்த தேதியில் ஆக்கிரமிப்பு செய்தார் என்றால் தினமும் குடித்துவிட்டு என் நிலத்திற்கு வருவார்.

15. வாதியின் எல்லை கல்லை பிடிங்கிவிட்டு அவரிடம் பிரச்சினை செய்தேன் என்றால் இல்லை. மேற்படி பிரச்சினையில் வாதியின் மகனுக்கு அடிப்பட்டு, வாதியின் மைத்துணன் மனைவிக்கு தலையில் அடிபட்டு மருத்துவமனையில் சேர்த்துள்ளார்கள் என்றாலும் அதற்கு அவர்கள் என் மீது புகார் கொடுத்துள்ளார் என்றால் மேற்படி சம்பவம் நடைபெறவில்லை. என் இடத்தை அளப்பதற்கு நீதிமன்றம் மூலம் வழக்கறிஞர் ஆணையர் நியமிக்கப்ட்டார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும்.

16. எந்த தேதியில் நீதிமன்ற ஆணையர் அளந்தார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் ஞாபகமில்லை. 27.08.2022 தேதியில் நீதிமன்ற ஆணையர் முதல் நா'ளில் வழக்கு சொத்தை பார்வையிட வரும்போது நான் மட்டும் தான் இருந்தோன் என் வழக்கறிஞர் இல்லை என்றால் சரிதான். இரண்டாவது முறையாக நீதிமன்ற ஆணையர் வந்த தேதி தெரியுமா என்றால் தெரியாது. வழக்கறிஞர் ஆணையர், சர்வேயர் வழக்கு சொத்தை அளக்கும் போது என் வழக்கறிஞர் மற்றும் நான் இருந்தோம் என்றால் சரிதான். வாதியின் வழக்கு சொத்தை மட்டும் அளந்தார்களா அல்லது என் சொத்தையும் அளந்தார்களா என்றால் மொத்தாக சேர்த்து அளந்தார்கள்.

17. வாதியின் ஆவணத்தை மட்டும் பார்த்து அளந்தார்களா அல்லது என் ஆவணத்தை பார்த்து அளந்தார்களா என்றால் என் ஆவணத்தை வாங்கிவில்லை வாதியின் ஆவணத்தை மட்டும் தான் வாங்கினார்கள். சர்வேயர் அளக்கும் போது நான் வாதியின் இடத்தை ஆக்கிரமிப்பு செய்ததாக சொன்னார்களா அல்லது வாதி என் இடத்தை ஆக்கிரமிப்பு செய்ததாக சொன்னார்களா என்றால் எதுவும் சொல்லவில்லை. சர்வேயர் அளந்த பிறகு வழக்கறிஞர் அறிவிப்பில் REFERENCE என்ற பட்டியலில் வேணுகோபால் மகன்கள் விநாயகம், பெருமாள், நாகன் ஆகியோரின் ஆவணத்தின்

அடிப்படையில் நான் வாதியின் இடத்தை ஆக்கிரமிப்பு செய்ததாக அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் எங்களிடம் பத்திரம் வாங்கி பார்ககவில்லை.